ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2076/39 - 2018 ජූනි 22 වැනි සිකුරාදා - 2018.06.22
*2076/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவிற்கான காப்புவாசகம் (அ) இன் கீழான கட்டளை*

**2018 ஆம் ஆண்டின் 128 ஆம் இலக்க கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/9/2016/டபிள்யூஎஸ்/343.
பி. செ. தொடர் இல. : பீஎ/பீஎ/எல்ஏஎ/3/5/44.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு அவ்வட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற
மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
'மிஹிகத மெதுர',
இல. 1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018, யூன் 20.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் அலுவலர்** : பிரதேச செயலாளர், பதுளை.

2. **காணி பற்றிய விபரம்** : ஊவா மாகணத்தில், பதுளை மாவட்டத்தில், பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், றில்பொல கோறளை சிறு பிரிவில், கிளைய்னெல்பின் (80எச்) கிராம அலுவலர் பிரிவில், வெடிகுனே (இ. கி. வ 170 இல்) என்று அழைக்கப்படுகின்ற கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயார் செய்யப்பட்ட 17.01.2017 ஆந் திகதியிடப்பட்ட பி/பிஎல்/2016/351 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தில் விபரிக்கப்பட்ட இரு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள்:.

01. **துண்டு 'ஏ' - பலகல்லவத்தை - விஸ்தீரணம்: சுமார் 0.1780 ஹெக்டயார்**

வடக்கு: துண்டு பி மற்றும் வீதி ; கிழக்கு: வீதி ; தெற்கு: வீதி ; மேற்கு: வீதி மற்றும் துண்டு பி.

02. **துண்டு 'பி' - பலகல்லவத்தை - விஸ்தீரணம்: 0.0243 ஹெக்டயார்**

வடக்கு: இ. கி. வ. 170 இல் உள்ள துண்டு இல. 80 மற்றும் வீதி ; கிழக்கு: வீதி மற்றும் துண்டு ஏ ; தெற்கு: துண்டு ஏ மற்றும் வீதி ; மேற்கு: இ. கி. வ. 170 இல் உள்ள துணடு இல. 80.

7 - 207


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.
இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.